**தேசிய பாதுகாப்பு நிதியம் - 2014**

---

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முதலீட்டுப் பதிவேடு என்பவற்றை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1985 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 12(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க, எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய பாதுகாப்பு நிதியத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் செயற்பாட்டு முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடாக வகைப்படுத்தப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் நியாயமான பெறுமதியைக் காண்பிப்பதற்காக மீள மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 11,030,000 பெறுமதியான காணி, ரூபா 4,520,000 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் நன்கொடைகளாக கிடைத்த ரூபா 150,000 பெறுமதியான நூதனப் பொருட்கள் என்பவற்றை மீள் மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

நிதியத்தின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பான அவ்வாறானதொரு பதிவேடொன்று தயாரிக்கப்படவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினது செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாகிய நிதி விளைவுகள் ரூபா 66,075,563 மிகையாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 80,688,937 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா

14,613,374 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 14,785,007 ஆல் அல்லது 18 சதவீதத்தால் குறைவடைந்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தமது உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுகையில் காயங்களுக்கு ஆளாகும் அல்லது மரணமடையும் பொலிஸ் அதிரடிப்படை அல்லது படையினரின் அல்லது அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு ஏதாவது நலன்களை வழங்குவது அடங்கலான தேசிய பாதுகாப்பை முன்னேற்றுவதற்காக மற்றும் அதனை உறுதிப்படுத்துதற்கு பெருமளவு காரணமாக அமைவதாக நிதியத்தின் ஆளுநர் சபை கருதும் விதத்தில் மற்றும் அவ்வாறான விடயங்களுக்கு நிதியத்திற்குச் சொந்தமான பணத்தை சனாதிபதியின் பணிப்புரைகளுக்கிணங்கப் பயன்படுத்துதல் நிதியத்தின் ஆளுநர் சபையினது பணியாக உள்ளது. வருடாந்தம் ஈட்டப்படும் வருமானம் குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படல் மிக நலிவுற்ற நிலையில் இருந்தது. கடந்த 05 ஆண்டுகளின் போது செலவிடப்பட்ட நலன்புரிச் செலவினம் மற்றும் ணவிரு நன்கொடைகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன.

| ஆண்டு | பெறப்பட்டமொத்த வருமானம் | நலன்புரிச் செலவினம் மற்றும் ரணவிரு நன்கொடை | பெற்ற வருமானத்தில் நலன்புரிச் செலவினத்திற்கும் ரணவிரு நன்கொடைகளுக்காக செலவிடப்பட்ட சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| 2014 | 69,967,787 | 3,698,843 | 5.29 |
| 2013 | 84,776,544 | 3,892,332 | 4.59 |
| 2012 | 64,988,177 | 7,273,184 | 11.19 |
| 2011 | 49,082,045 | 32,250 | 0.06 |
| 2010 | 75,509,010 | 40,149,839 | 53.17 |

(ஆ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின் பிரகாரம் யுத்தத்தினால் மரணித்த மற்றும் காணாமல் போன முப்படைக்குரிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை 25273 மற்றும் வலது குறைந்த வீரர்களின் எண்ணிக்கை 18942 ஆக இருந்ததுடன், யுத்தத்தினால் மரணித்த, வலது குறைந்த மற்றும் காணாமல் போன முப்படைகளின் பொலிசின் ரணவிரு குடும்பங்களில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தியடைந்த 138 பிள்ளைகளுக்கு மீளாய்வாண்டில் ரூபா 3,450,000 ஆன சேமிப்பு வைப்புக்கள் வழங்கல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் யுத்தத்தினால் வலது குறைந்த, மரணித்த மற்றும் காணாமல் உத்தியோகத்தர்களின் குடும்பங்களுக்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாத்திரம் நிவாரணம் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. முழு அங்கத்தவர்களுக்காக முறையான நிவாரண வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்தி அவர்களுக்கு நிவராணம் வழங்குவதற்காக ஏனைய மாற்று வழிகள் தொடர்பில் நிதியத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

தரைப் படையின் பயன்பாட்டிற்காக வாடகைக்கு வழங்கப்பட்ட நிதியத்திற்குச் சொந்தமான 03 வீடுகளுக்கு 2012 திசெம்பர் மாதம் முதல் 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 1,387,500 கூட்டுத்தொகையான வீட்டு வாடகையை 2015 நவெம்பர் 18 ஆந் திகதியளவிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வீடுகளுக்கு அறவிடப்படும் வாடகையினை 2006 ஆம் ஆண்டின் பின்னர் திருத்தம் செய்வதற்கு நிதியத்தின் ஆளுகை சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.1(அ) பிரிவின் பிரகாரம் நிதியத்திற்காக பாதீடொன்று தயாரித்து முறையான அங்கீகாரத்துடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகம் மற்றும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் அத்தேவைப்பாடு நிறைவற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேற்குறித்த சுற்றறிக்கையின் 4.1(இ) பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பாதீடொன்று இல்லாமல் உரிய நிதியாண்டில் எந்தவொரு செலவினத்தை மேற்கொள்ளக்கூடாத போதிலும், நிதியத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாதீடொன்று இல்லாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 3,719,493 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 நிர்வாக சபைக்கூட்டம்

உரிய அங்கத்தவர்களை ஒன்று திரட்ட முடியாதமையால் கூட்டங்களை நடாத்த முடியாதிருந்ததாக நிதியத்தின் செயலாளரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான நிலைமையொன்றின் கீழ் நிதியத்தை வழிநடாத்துவதற்காக முக்கியமான தீர்மானம் எடுப்பது தொடர்பில் அது தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் செயலாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்து முகாமைத்துவம்
(இ) செயலாற்றல்